# அன்பரின் ஊழியம்

# ANBARIN OOZHIYAM

மலர்: 12 இதழ் : 06 ஜுன் 2026 தனிபிரதி - ரூ.20/- ஆண்டு சந்தா ரூ.200/-

Vol : 12 Issue No : 06 June 2026 Single Copy – Rs.20/- Annual Subscription Rs.200/-




Available Now
பரலோகமே
என் சொந்தமே

# அன்பரின் ஊழியம்

## ஆசிரியர் உரை



Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

நேற்றும் இன்றும் என்றும் மாறாத நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.

மாற்றம் ஒன்றே மாறாதது என அநேகர் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். இந்த காலங்களிலும் அவ்வாறே நடந்துக்கொண்டும் இருக்கிறதை நாம் பார்க்கிறோம். சகலமும் மாறிக்கொண்டே இருக்கிறது. இன்றைக்கு இருந்த விலைவாசி நாளைக்கு இருப்பது இல்லை, இன்றைக்கு இருக்கிற பழக்கவழக்கங்கள் நாளைக்கு இருப்பது இல்லை. இன்று செய்கிற வேலைகள் நாளைக்கு இருப்பது இல்லை, இன்றைக்கு இருக்கிற அதிகாரங்கள் நாளைக்கு இருப்பது இல்லை. இவ்வாறு நம் எல்லாருடைய வாழ்கையிலும் ஏதோ ஒரு மாற்றம் வந்துக்கொண்டே இருக்கிறது. இத்தகைய மாறக்கூடிய சூழ்நிலைகள் மத்தியில் நம் தேவனாகிய இயேசுகிறிஸ்து ஒருவரே மாறாதவராக இருக்கிறார்.

வேதம் கூறுகிறபடி அவர் ஒரு கழுகைப்போல நம்மை சுமக்கிறார். (உபாகமம் 32:11) ஒரு பட்சியைப் போல நம்மை பாதுகாக்கிறார். (ஏசா.31:5) ஒரு கழுகுக்கு ஒத்த பெலனை நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நமக்கு சத்துவத்தைக் கொடுத்து பெலனடைய செய்கிறார். (ஏசா.40:31) இந்த தேவன் தாமே உங்களோடு இருந்து உங்களை ஆசீர்வதித்து நடத்துவாராக.


ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

| சந்தா விபரம் | இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-<br>வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/- |
|---|---|

காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை

ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627

தெலுங்கு: +91 9944536343

மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003

Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy – 620 003

கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். இந்த ஜூன் மாதத்தில் மார்த்தாண்டம் மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கிற கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

அன்பரின் ஊழியத்தின் வாயிலாக நடைபெறுகிற அனைத்து ஊழியங்களுக்காகவும், ***S.J.Saves Trust*** பணிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

இந்த புதிய கல்வியாண்டுக்குள் சென்றிருக்கிற உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் நன்கு படிக்க கர்த்தர் விசேஷித்த ஞானத்தை கொடுத்து பாதுகாக்கும்படியாக ஜெபிக்கிறேன்.

உங்கள் குடும்பத்தில் படிப்பை முடித்து, ஊழியத்தில் வாஞ்சையாக உள்ள பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் இருப்பார்களானால் அவர்களை அன்பரின் ஊழியத்திற்கு அனுப்பி வையுங்கள். வேலைவாய்ப்பு குறித்த விபரங்களை இந்த பத்திரிக்கையின் 24-ம் பக்கத்தில் பார்த்து அறிந்துக்கொள்ளலாம்.

***Ministry of Jesus youtube*** சேனல் வாயிலாக ***Level up*** என்ற புதிய நேரலை நிகழ்ச்சிகள் மாதந்தோறும் நடைபெற்று வருகிறது. நீங்கள் தவறாமல் பார்த்து பயன்பெறுங்கள்.

எங்கள் அப்பா, அம்மா இருவருடைய நல்ல சுகத்திற்காகவும், கர்த்தர் அவர்களுக்கு தேவையான பெலனைத் தரும்படியாகவும் ஜெபியுங்கள். எங்கள் அனைவருக்காகவும், பயணங்களில் தேவ பாதுகாப்பு உண்டாகவும் ஜெபியுங்கள்.

அன்பரின் ஊழிய பங்காளர்களாகிய உங்கள் அனைவருக்காகவும் நாங்கள் தொடர்ந்து ஜெபிக்கிறோம்.

<u>கிறிஸ்துவின் பணியில்</u>

**Dr. ஜேன் ஜாஷ்வா**

***jane@mojindia.org***



# நோக்கிப்பார்
## Look to Me



தேவ செய்தி
*Rev. Dr. A.* **ஜாஷ்வா**

கிறிஸ்துவுக்குள் பிரியமான பங்காளர்கள் ஒவ்வொருவரையும், நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்போடு வாழ்த்துகிறேன். இந்த தேவ செய்தியின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாத தியானத்திற்கு கர்த்தர் கொடுத்த வசனம் *ஏசாயா 45:22 பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப் படுவீர்கள், நானே தேவன், வேறொருவரும் இல்லை.*

அன்பார்ந்த தேவ ஜனமே, நீங்கள் எங்கிருந்தாலும் தேவனை நோக்கிப் பார்க்கும்படி கர்த்தர் இந்த மாதத்தில் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறார். *நோக்கிப்பார்* (Look to Me) நீங்கள் எந்த கண்டத்தில் இருந்தாலும், எந்த நாட்டிலிருந்தாலும், எந்த இடத்தில் இருந்தாலும் தேவனை நோக்கிப்பார்க்கும்படி அவர் விரும்புகிறார். நிலாவிற்கு போனாலும், நட்சத்திரத்திற்கு போனாலும் நாம் மீண்டும் பூமிக்கு வந்து சேரவேண்டும். ஏனென்றால் அங்கு நாம் வாழ முடியாது. இன்றைக்கு மனிதன் பலவிதமான ஆராய்ச்சிகளை செய்து பல காரியங்களை கண்டுபிடித்தாலும், தேவனுடைய அனந்த ஞானத்தை எந்த மனிதனாலும் மேற்கொள்ள முடியாது. அவர் ஒருவரே கர்த்தாதி கர்த்தர், தேவாதி தேவன். அதனால் தான் அவர் சொல்லுகிறார், *“பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்”* என்கிறார்.

இன்றைக்கு பல சூழ்நிலைகளில் நாம் மனிதர்களை நோக்கி பார்க்கிறோம். அவசரமான ஒரு காரியத்தை முடிப்பதற்காக அல்லது செல்வாக்கு உள்ள ஒரு நபரிடம் ஒரு கையெழுத்து வாங்குவதற்காக என மனிதர்களை நோக்கி பார்க்கிறோம். அவர்களை தேடி செல்கிறோம். இது தவறு என சொல்லமுடியாது. மனிதர்களுடைய தயவு நமக்கு தேவையானதாக இருக்கிறது. இயேசு இந்த பூமியில் வாழ்ந்தபொழுது ஞானத்திலும், மனுஷர் தயவிலும் பெருகினார் என வேதத்தில் பார்க்கிறோம். *இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். லூக்கா 2:52*

உலகப்பிரகாரமாக பல்வேறு தேவைகளுக்காக மனிதர்களை நோக்கிப்பார்த்து, பார்த்து ஒரு சிலர் சோர்ந்துபோகிறார்கள். ஒரு சில நேரத்தில் மனிதர்களை நோக்கிப்பார்த்து

நன்மைகள் நடந்திருக்கலாம் அல்லது தீமைகள் நடந்திருக்கலாம். மனிதர்களை நோக்கி பார்த்து அவை நூறு சதவீதம் நன்றாக முடியும் என சொல்ல முடியாது. சில நேரங்களில் வேறு ஏதாவது ஒரு பிரச்சனையில் கொண்டு போய்விடும். ஆனால் தேவனை நோக்கி பார்க்கும்பொழுது அது நூறு சதவீதம் ஆசீர்வாதத்தை கொண்டு வரும், ஜெயத்தை தரும், ஒரு விசேஷித்த பாக்கியத்தை உண்டாக்கும். மனிதர்களை நோக்கி பார்த்து பார்த்து கண்பூர்த்துப்போன ஒவ்வொருவரும் இனிமேல் தேவனை நோக்கி பார்க்க வேண்டும். இந்த வார்த்தை தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தை. ஆகவே அது மாறுவதில்லை. *இந்த நீதியான வார்த்தை என் வாயிலிருந்து புறப்பட்டது, இது மாறுவது இல்லையென்கிறார். ஏசாயா 45:23.* ஆண்டவர் சொன்னால் அது சொன்னது தான். அவை மாறுவதில்லை. *சங்கீதம் 33:9-ல் அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்* என எழுதப்பட்டுள்ளது. என்னை நோக்கிப்பார் என ஆண்டவரே சொல்லிவிட்டார். இந்த வார்த்தை அப்படியே நம் மனதில் பதிய வேண்டும். ஆண்டவரை நோக்கிப்பார்த்தால் எல்லாமே நடக்கும். வேதத்தின் அடிப்படையில் நான்கு ஆசீர்வாதங்களை இங்கு குறிப்பிட்டு உங்களுக்கு விளக்குகிறேன்.

## 1. இரட்சிக்கப்படுவீர்கள்!

*என்னை நோக்கிப்பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள், நானே தேவன், வேறொருவரும் இல்லை.*

*ஏசாயா 45:22*

தேவனை நோக்கி பார்க்கும்பொழுது இரட்சிக்கப்படுவோம் என்ற உறுதியை அவர் நமக்கு தருகிறார். இரட்சிப்பு தேவையா என்ற கேள்வி உங்களுக்கு வருகிறதா? இரட்சிப்பு அவசியம். அந்த இரட்சிப்பு இரட்சகரால் தான் தரமுடியும். அந்த இரட்சகர் இயேசு ஒருவரே. இயேசு என்ற நாமமே நம்மை இரட்சிக்க முடியும். இயேசுவின் நாமத்தினால் நம் பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. இயேசுவின் நாமம் இல்லாமல் வேறு ஒரு நாமம் நம்மை இரட்சிக்க முடியாது. அந்த நாமத்தை நோக்கி பார்க்கும்பொழுது இரட்சிப்பு உண்டாகும்.

நான் செய்கிற புண்ணிய கிரியைகள் என்னை இரட்சிக்குமா? என்னுடைய சன்மார்க்க நெறிகள் என்னை இரட்சிக்க முடியுமா? நான் செய்கிற தான தர்ம காரியங்கள் என்னை இரட்சிக்க முடியுமா? நான் செய்கிற பல நல்ல காரியங்கள் என்னை இரட்சிக்குமா? என நீங்கள் கேட்கலாம், இல்லை. நீங்கள் செய்கிற அனைத்து நன்மையான காரியங்களும் உங்களை இரட்சிக்க முடியாது. நீங்கள் செய்கிற அனைத்து நல்ல காரியங்களும் உங்களுடைய நற்பண்புகளாக இருக்கும். அவை உங்களை பரலோகத்திற்கு அழைத்து செல்ல முடியாது.

வெளிப்படுத்தல் புத்தகத்தில் மூப்பர்களின் ஒருவன் கேட்கிறான். இவர்கள் எங்கிருந்து வந்தவர்கள்? *மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள். வெளிப்படுத்தல் 12:11*

இயேசு ஒருவரே நமக்காக மரித்திருப்பதால் அவர் ஒருவரே நம்மை இரட்சிக்க முடியும். இயேசு மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து, அவரே தெய்வம் என நிரூபித்து

காட்டியுள்ளார். இன்றைக்கு பலர் உண்மை எது என தெரியாமல், பரலோகம் செல்வதற்கான வழி எது என அறியாமல் அங்குமிங்கும் அலைந்துக்கொண்டு இருக்கிறார்கள். யோனா காலத்தில் நினிவே மக்களுக்காக கர்த்தர் பரிதபித்தார். *வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத... மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார். யோனா 4:11.* இன்றைக்கும் பலர் தங்களை அதிகமாக வருத்திக்கொண்டு பல காரியங்களை மேற்கொள்ளுகிறார்கள். அதன்மூலம் நான் சொர்க்கத்திற்கு செல்வேனா, என்னுடைய கஷ்டம் நீங்குமா? என ஏங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து இயேசு சொல்கிறார், நீ உன்னை வருத்திக்கொண்டு எங்கும் செல்லவேண்டாம். நீ இருக்கிற இடத்தில் "என்னை நோக்கிப்பார்" என சொல்லுகிறார். எரேமியா 23:23-ல் *நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.* ஆகவே நாம் எந்த இடத்திலிருந்தாலும் அவரை நோக்கிப்பார்க்க முடியும்.

ஒரு பக்தன் தன் பாடலில், "நீ உனக்கு சொந்தமல்லவே, மீட்கப்பட்ட பாவி நீ உனக்கு சொந்தமல்லவே" என அழகாக எழுதியுள்ளார். ஏனென்றால் நாம் அவருடைய படைப்பு, அடுத்து அவர் தம் இரத்தத்தினால் நம்மை விலைகொடுத்து வாங்கிவிட்டார். அந்த இரத்தத்தினால்தான் பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாகியிருக்கிறது. அவரை நோக்கிப்பார்க்கும்பொழுது இரட்சிப்பு உண்டாகிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே நம்மை இலவசமாக இரட்சிக்கிறது. *அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். 1யோவான் 1:7.* இதைக்குறித்து பவுல், *1கொரிந்தியர் 7:23-ல் நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள், மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள் என சொல்லுகிறார்.* இயேசு சிலுவையில் தன்னுடைய இரத்தத்தையே கிரயமாக கொடுத்து நம்மை மீட்டுள்ளார்.

உதாரணமாக நாம் இன்சூரன்ஸ் பாலிசியை சரியாக செலுத்தி வந்தால்தான் அவை பயன்தரும். அவற்றை சரியாக செலுத்தாவிட்டால் அப்படியே கிடப்பில் இருந்துவிடும். அதுபோல உங்களுடைய இரட்சிப்பு எத்தகைய நிலையில் இருக்கிறது. நான் பல வருடங்களுக்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டுவிட்டேன் என அப்படியே இருந்துவிடக்கூடாது. உங்களுடைய இரட்சிப்பு ஜீவனுள்ளதாக இருக்க வேண்டும். கடைசிவரை கர்த்தருக்குள் நிலைத்திருக்க வேண்டும். உங்களுடைய இரட்சிப்பு உயிரோட்டமுள்ளதாக இருக்கிறதா? ஒவ்வொரு நாளும் தேவ சமூகத்தில் உங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆண்டவரே உம் பரிசுத்த இரத்தத்தால் என்னை கழுவும் என அவரை நோக்கிப்பார்த்து ஜெபியுங்கள். நீங்கள் பெற்ற இரட்சிப்பை இறுதி வரை காத்துக்கொள்ளுங்கள். *முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான். மத்தேயு 10:22.* ஏனென்றால் பரலோகத்திற்கு செல்வதற்கான முதல் படியே இரட்சிப்பு தான்.

## 2. பிழைப்பீர்கள்!

*கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை,*

*கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார்.*

*எண்ணாகமம் 21:8*

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கும், மோசேக்கும் விரோதமாக முறுமுறுத்து, தங்கள் பொல்லாத கிரியைகளினால் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தபொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை அவர்களுக்குள் அனுப்பினார். அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள். அதன்பின் அவர்களுக்கு புத்தி வருகிறது. ஜனங்கள் மோசேயினிடத்தில் போய், நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசி பாவஞ்செய்தோம். சர்ப்பங்கள் எங்களைவிட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ண வேண்டும் என கேட்டார்கள். உடனே மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம் செய்தான். அப்பொழுது ஆண்டவர் சொன்ன காரியம், *நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை, கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார்.* இங்கு சர்ப்பங்களை நீக்கிபோடுவது ஆண்டவருக்கு எளிதான காரியம். ஆனால் தேவன் அதை செய்யவில்லை. நான் ஒருவரே தேவன் என்பதை இவர்கள் புரிந்துக்கொள்ளட்டும் என்பதற்காக தேவனே அவற்றை அனுமதித்திருந்தார்.

*அப்படியே மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான், சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைப்பான். எண்.21:9* கர்த்தருடைய வார்த்தைக்கு மோசே கீழ்ப்படிந்து ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி கம்பத்தின்மேல் வைத்துவிட்டான். கம்பத்தை நோக்கி பார்த்த அனைவரும் பிழைத்தனர். யாரெல்லாம் அந்த வார்த்தைக்கு கீழ்ப்படிந்து செயல்பட்டார்களோ அவர்கள் பிழைத்தார்கள். அந்த வெண்கல சர்ப்பத்தை நாங்கள் எதற்கு நோக்கி பார்க்கவேண்டும் என யாரும் கேட்க வில்லை. உடனே கீழ்ப்படிந்தார்கள், நோக்கிப் பார்த்தார்கள், பிழைத்துக் கொண்டார்கள். கர்த்தரையே நோக்கி பார்க்கவேண்டும் என்பதன் அடையாளமாக கர்த்தர் அந்த காரியத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு அறிவுறுத்தினார்.

இன்றைக்கு ஒரு சிலர் நான் ஆலயத்திற்கு வந்தால்தான் என்னை கர்த்தர் ஆசீர்வதிப் பாரா? வேதத்தை வாசித்தால்தான் கர்த்தர் என்னை ஆசீர்வதிப்பாரா என வீண் வாதங்களை எழுப்பிக் கொண்டு வீட்டிற்குள்ளேயே முடங்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

என் அன்பு தேவ பிள்ளைகளே, நீங்கள் பிழைக்க வேண்டுமானால் அவரை நோக்கி பார்க்கத்தான் வேண்டும். *ஆமோஸ் 5:4-ல்* கர்த்தர் சொல்லுகிறார், *என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்.* உங்கள் வாழ்க்கையில் உள்ள உபத்திரவங்களை, வியாதிகளை, போராட்டங்களை பார்த்து சோர்ந்து போகாதீர்கள். அவைகள் வராது என சொல்ல முடியாது. மாம்சம் இருக்கும்வரை நோய் வரும், பெலவீனம் வரும் என யோபு கூறியிருக்கிறான். *அவன் மாம்சம் அவனிலிருக்குமளவும் அதற்கு நோவிருக்கும், அவன்*

*ஆத்துமா அவனுக்குள்ளிருக்கு மட்டும் அதற்குத் துக்கமுண்டு என்றான். யோபு 14:22* எப்பொழுதும் எல்லா நேரத்திலும் இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவையெல்லாம் வந்தாலும் உங்களை ஒன்றும் சேதப்படுத்த முடியாது, ஒன்றும் உங்களை அசைக்க முடியாது. ஏனென்றால் நீங்கள் நோக்கிப்பார்க்கிறவர் இயேசு.

இம்மையில் நீங்கள் பிழைக்க வேண்டுமானால், மறுமையில் அவரோடு நித்திய நித்தியமாய் வாழவேண்டுமானால், இயேசுவை நோக்கிப்பாருங்கள். ஏனென்றால் இயேசு தான் நம் ஜீவன், அவர் தான் நம் பிழைப்பு. நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கிற இந்த வாழ்க்கை அவர் கொடுத்தது. இம்மையில் நீங்கள் சந்திக்கிற ஒவ்வொரு பிரச்சனைகள் மத்தியில் இயேசுவை நோக்கிப்பாருங்கள். அப்பொழுது நீங்கள் பிழைப்பீர்கள். அனைத்தும் ஜெயமாக முடியும்.

## 3. பிரகாசமடைவீர்கள்!

*அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள், அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை.*

*சங்கீதம் 34:5*

நம் தேவன் நம்மை பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார். அவரை நோக்கி நீங்கள் பார்க்கும்பொழுது உங்கள் முகம் பிரகாசமடையும். உங்கள் முகம் வெட்கப்படுவது இல்லை. இதுவரை நீங்கள் முகவாட்டத்துடன் இருந்திருந்தால் இயேசுவை நோக்கிப்பாருங்கள். உங்கள் முகம் பிரகாசம் ஆகும். உங்கள் முகம் மட்டும் அல்ல, உங்கள் வாழ்க்கை பிரகாசமாகும். உங்கள் ஜீவியம் பிரகாசமாகும். உங்கள் எல்லையெங்கும் பிரகாசமாயிருக்கும்.

மோசே நாற்பது நாள் இரவும் பகலும் புசியாமல் கர்த்தருடைய சமூகத்தில் காத்திருந்தான். கர்த்தர் கொடுத்த கற்பனைகளை எடுத்துக்கொண்டு ஜனங்களை நோக்கி வந்தான். அவன் முகம் அவ்வளவு பிரகாசமாக இருந்தது. மக்களால் அவனை பார்க்க முடியவில்லை. அந்த அளவிற்கு அவன் முகம் பிரகாசமாக இருந்தது. கர்த்தர் மோசேயைக்கொண்டு பலத்த அற்புதங்களை செய்தார். வனாந்தரத்தில் பெரும் ஜனக்கூட்டத்தையே வழிநடத்தினான். மோசேயைப்போல ஒரு தீர்க்கதரிசி அவனுக்கு முன்னும் இருந்தது இல்லை, அவனுக்கு பின்னும் வந்தது இல்லை. கன்மலையுடன் பேசு என ஆண்டவர் சொன்னப்போது அவன் கன்மலையை அடித்தான், தண்ணீர் வந்தது. அங்கேயும் ஆண்டவர் மோசேயை வெட்கப்படுத்தவிடவில்லை. ஜனங்கள் முன்பாக அவனை கனப்படுத்தினார். தேவனை நோக்கிப்பார்த்த மோசே பிரகாசமாயிருந்தான். அவன் வாழ்க்கை பிரகாசமாயிருந்தது.

தேவ பிள்ளைகளே, உங்கள் வாழ்க்கை பிரகாசிக்க வேண்டுமானால், உங்கள் வாழ்க்கை ஒளிர வேண்டுமானால் அவரை நோக்கிப்பார்க்க வேண்டும். அப்பொழுது உலகப்பிரகாரமான வாழ்க்கையிலும், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் உங்களை பிரகாசிக்க செய்வார். தேவன் எதிர்பார்க்கிற பிரகாசத்தையே உங்களுக்கு தருவார். மனுஷருடைய கண்களில் நீங்கள் பிரகாசமாக இருக்கவேண்டிய அவசியமில்லை, தேவனுடைய பார்வையில் நீங்கள் பிரகாசமாய் இருக்க

வேண்டும். அது தான் முக்கியம். இஸ்ரவேல் ஜனங்கள் இறுதிவரை மோசேக்கு விரோதமாக முறுமுறுத்துக் கொண்டே இருந்தார்கள். ஆனால் தேவனுடைய பார்வையில் மோசே கனம் பெற்றவனாக இருந்தான். எவருக்கும் கிடைக்காத ஒரு பாக்கியம் மோசேக்கு மட்டும் கிடைத்தது. தேவனாகிய கர்த்தரே மோசேயை அடக்கம் செய்தார். இது யாருக்கும் கிடைக்காத ஒரு பெரிய பாக்கியம். காரணம் மோசே தேவனை நோக்கிப்பார்த்தான். எந்த சூழ்நிலையிலும் கர்த்தரை நோக்கிப்பாருங்கள். அவர் உங்களை பிரகாசிப்பார். அவர் உங்களை பிரகாசிக்க செய்யும்பொழுது நீங்கள் ஒருநாளும் வெட்கப்பட்டு போவதில்லை. துன்பமா? துயரமா எந்த சூழ்நிலையிலும் அவரை நோக்கிப்பார்க்கும் பொழுது நீங்கள் பிரகாசமடைவீர்கள். *உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. யோவான் 1:9* மெய்யான ஒளியாகிய இயேசுவை நீங்கள் நோக்கிப் பார்க்கும்பொழுது, பிரகாசமடைவீர்கள். தேவ சமூகத்திலே எவ்வளவு நேரம் நீங்கள் காத்திருக்கிறீர்களோ அந்த அளவிற்கு நீங்கள் பிரகாசிப்பீர்கள். தேவன் கொடுக்கிற பிரகாசத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் நித்தியமானது, அதுவே நிரந்தரமானது, அதுதான் ஆசீர்வாதமானது. ஆகவே இயேசுவை நோக்கிப்பாருங்கள். நீங்கள் பிரகாசமடைவீர்கள். உங்களுடைய முகங்கள் வெட்கப்பட்டு போவதில்லை.

## 4. விடுதலையாவீர்கள்!

*பேதுருவும் யோவானும் அவனை உற்றுப்பார்த்து: எங்களை நோக்கிப்பார் என்றார்கள்.*

*அப்போஸ். 3:4*

தேவாலயத்திலே ஜெபிக்கும்படியாக ஜனங்கள் எல்லாரும் சென்றுக் கொண்டிருந்தார்கள். பிறவியிலேயே சப்பாணியான ஒரு மனிதன் ஆலயத்தின் வெளியே அமர்ந்து மக்களிடம் பிச்சை கேட்டுக்கொண்டு இருந்தான். அப்பொழுது பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கும்பொழுது, அவர்களைப் பார்த்து அந்த மனிதன் பிச்சை கேட்டான். உடனே பேதுரு அவனைப் பார்த்து, எங்களை நோக்கிப்பார் என்றான். அந்த மனிதன் தனக்கு ஏதாவது கிடைக்கும் என நம்பி ஆவலாய் அவர்களை நோக்கிப் பார்த்தான். *அப்பொழுது பேதுரு, "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை, என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன், நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" என்று சொல்லி, வலதுகையினால் அவனைப் பிடித்துத்தூக்கிவிட்டான், உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான். நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். அப்போஸ். 3:6-8* "எங்களை நோக்கிப்பார்" என இங்கு பேதுரு சொன்ன அழகான இந்த வார்த்தையை கவனியுங்கள். எங்களை நோக்கிப்பார் என்பதன் அர்த்தம் என்னவென்றால், *"எங்களுக்குள் இருக்கிற இயேசுவை நீ நோக்கிப்பார்"* என்பதாகவே இருக்கிறது. அவனும் அப்படியே கீழ்ப்படிந்து அவர்களை நோக்கிப்பார்த்தான். உடனே பேதுரு என்னிடத்திலுள்ளதை உனக்கு தருகிறேன் என சொல்லி அவனை தூக்கிவிட்டபொழுது அவன் குதித்தெழுந்து நடந்தான். இங்கு அவர்கள் இயேசுவை வெளிப்படுத்தினார்கள். உங்கள் வாழ்க்கையில் விடுதலை

இல்லாமல் இருக்கிறீர்களா? நீங்கள் இயேசுவை நோக்கி பார்க்கும்பொழுது விடுதலையாவீர்கள். வியாதியிலிருந்து, பாவத்திலிருந்து, சாபத்திலிருந்து, தரித்திரத்திலிருந்து விடுதலையாவீர்கள். பேதுரு நடந்து போகும்பொழுது, அவன் நிழல் பட்ட மாத்திரத்தில் பலர் சுகமடைந்தனர். நிழலில் ஒன்றும் இல்லை. பேதுருவுக்குள் இருந்த இயேசு அங்கு வெளிப்படுத்தப்பட்டார். ஆகவே நோயாளிகள் சுகமாயினர்.

உங்களை பார்க்கிறவர்கள் இயேசுவை பார்க்க வேண்டும். அந்த அளவிற்கு உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை மாற வேண்டும். ஒருவேளை உலக மக்கள் மீது, உலக காரியங்கள் மீது உங்கள் பார்வையை வைத்து சோர்ந்து போய் காணப்படுகிறீர்களா? இன்றைக்கே உங்களை மாற்றிக்கொள்ளுங்கள். இயேசுவின் மீது உங்கள் கண்களை பதிய வையுங்கள். எப்பொழுதும் அவரையே நோக்கிப்பாருங்கள். அப்பொழுது உங்கள் வாழ்க்கையில் பெரிய ஆசீர்வாதத்தையும், விடுதலையையும் பெற்றுக்கொள்ள முடியும். *இதோ, வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப் போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ் செய்யும்வரைக்கும், எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது. சங். 123:2* கர்த்தர் நமக்கு இரக்கஞ்செய்யும்வரைக்கும் நம் கண்கள் அவரையே நோக்கியிருக்க வேண்டும். ஏனென்றால் நிச்சயமாக அவரே நமக்கு இரக்கம் செய்கிற ஒரே ஒரு தேவனாயிருக்கிறார். ஆகவே அவரை நாம் நோக்கிப்பார்க்க வேண்டும். *ஏசாயா 45:23 முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும்.* ஆம், மெய்யான தெய்வமாகிய இயேசுவை நோக்கி, முழங்கால்கள் யாவும் முடங்கும், நாவு யாவும் அறிக்கை செய்யும்.

என் அன்பு சகோதர, சகோதரிகளே, நீங்கள் இந்த பூமியில் எங்கு இருந்தாலும், தேவனை நோக்கிப்பாருங்கள், அப்பொழுது உங்கள் வாழ்வில் நான்குவிதமான ஆசீர்வாதங்களை பெறுவீர்கள். முதலாவது இரட்சிக்கப்படுவீர்கள், இந்த இரட்சிப்பு இலவசமானது, இது உங்கள் வாழ்க்கைக்கு அவசியமானது. இரண்டாவது தேவனை நோக்கி பார்க்கும்பொழுது நீங்கள் பிழைப்பீர்கள். எவ்வளவு பிரச்சனைகள், போராட்டங்கள் உங்களுக்கு வந்தாலும் அவரை மட்டுமே நோக்கிப்பாருங்கள். அப்பொழுது பிழைப்பீர்கள். மூன்றாவது கர்த்தரை நோக்கி பார்க்கும்பொழுது நீங்கள் பிரகாசமடைவீர்கள். உலக தோற்றத்தின்படி அல்ல, அவருடைய சித்தத்தின்படி உங்களை பிரகாசிக்கச் செய்வார். நான்காவது நீங்கள் அவருடைய பிள்ளைகளாக வாழும்பொழுது உங்களுக்குள் இருக்கும் இயேசு அநேகருடைய வாழ்வில் அற்புதங்களையும், அதிசயங்களையும் கொண்டு வருவார். ஆகவே நம் கண்கள் அவரையே நோக்கிப் பார்க்கட்டும். *தேவன் தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!!!*

★★★★★

**Tamil WhatsApp No**
**+91 95004 87059**

★★★★★

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

**அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்**

மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website)
Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe



கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

**வங்கிக் கணக்குகளின் விபரம்**

| ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS | Dr. ANANDA STIRA |
| --- | --- | --- |
| A/c no. 10848559426 | A/c no. 10848474869 | A/c no. 10848469699 |

IFS Code: SBIN 0000930 State Bank of India, Cantonment, Trichy Main Branch.

**Cell No 94888 45627, 80987 42638**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

# S.J.SAVES TRUST

(நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

**தரித்திரனுக்குத் தயை செய்கிறவனோ அவரைக் கனம்பண்ணுகிறான்.**

**நீதி.14:31**

சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பட்டி சுற்று வட்டாரத்தைச் சார்ந்த எய்ட்ஸ் நோயாளிகள், வயதானவர்கள் மற்றும் 50 விதவைப்பெண்களுக்கு S.J. SAVES TRUST மூலமாக பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டது.

Dr. ஆனந்த ஸ்திரா அவர்களுடன் பேசி, அவர்களுக்கு நம்பிக்கையான வார்த்தைகளை கூறி உற்சாகப்படுத்தினார்கள். *அவர்கள் அன்றாட வாழ்விற்கு தேவையான மளிகைபொருட்கள் அடங்கிய பை (அரிசி, பருப்பு, சர்க்கரை, கோதுமை மாவு, ரவை, தானிய வகைகள் மற்றும் மளிகை பொருட்கள்) வழங்கினார்கள். அத்துடன் சத்துமாவு, புரோட்டின் பவுடர், வைட்டமின் டானிக், பெண்களுக்கு சேலைகள் தரப்பட்டது.*











இந்த நிகழ்ச்சியின் இறுதியில் அனைவருக்கும் பிரியாணி, இனிப்பு மற்றும் கார வகைகளை கொடுக்கப்பட்டது. அவர்கள் சாப்பிட்டு மகிழ்ச்சியுடன் சென்றார்கள்.

இந்த பணிக்கு உதவிசெய்து வருகிற பங்காளர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகளை கூறிக்கொள்கிறோம். இந்த பணிகள் சிறக்க ஜெபியுங்கள்.

இந்த புதிய கல்வியாண்டில் நம் டியூஷன் சென்டரில் படிக்கிற ஏழை, எளிய பிள்ளைகளுக்கு ஸ்கூல் பேக், நோட்டு வகைகள் மற்றும் கல்வி உபகரணங்கள் அனைத்தும் வழங்குவதற்கு நீங்கள் தாராளமாக உதவி செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். ஒரு பிள்ளைக்கு ரூ.1000/- வீதம் 500 பிள்ளைகளுக்கு ரூ.5,00,000 வரை தேவைப்படுகிறது.

*மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

*(மத். 25:40)*

புதிய கல்வியாண்டில் நமது டியூஷன் சென்டரில் படிக்கிற ஏழை எளிய மாணவ, மாணவியர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு செல்ல நீங்கள் உற்சாகமாய் தாங்குங்கள். ஜெபியுங்கள். இந்த பணிக்கு உதவிசெய்கிற உங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதித்து பெருகச் செய்வாராக!

**S.J. SAVES TRUST -ல் உள்ள**
**ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய**

**Bank A/C Name : S.J. Saves Trust**
**Account No : 019150310875369**
**Bank : Tamil Nadu Mercantile Bank, Palakarai, Trichy.**
**IFS Code : TMBL0000019**
**A/C Type: Current**

# JUNE 2026

**01** என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன்.
(ஆதி.16:13)

**02** உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய். (உபா.4:29)

**03** அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்.
(நீதி.8:17)

**04** என்னைக் கண்டடைகிறவன் ஜீவனைக் கண்டடைகிறான்.
(நீதி.8:35)

**05** கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்;
(ஏசாயா 55:6)

**06** தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான். (மத்.16:25)

**07** தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்.
(மத்.7:7)

**08** அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.
(ஏசாயா 55:6)

**09** நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான். (யோவான் 10:9)

**10** விடியற்காலத்தில் கர்த்தருடைய மகிமையையும் காண்பீர்கள்.
(யாத்.16:7)

**11** அவர் உங்களுக்குமுன்னே கலிலேயாவுக்குப் போகிறார்;
அங்கே அவரைக் காண்பீர்கள். (மத்.28:7)

**12** மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள். (மாற்கு 14:62)

**13** வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள்.... (யோவான் 1:51)

**14** இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது,
நீங்களோ என்னைக் காண்பீர்கள். (யோவான் 14:19)

**15** என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்.
(யோவான் 14:9)

# JUNE 2026

**16** என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும்,.... உன்னை நிலை நிறுத்தினேன் (ரோமர் 9:17)

**17** தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்! (ரோமர் 11:22)

**18** இதோ, நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குத் தம்முடைய மகிமையையும் தம்முடைய மகத்துவத்தையும் காண்பித்தார்; (உபாகமம் 5:24)

**19** ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள். (நீதி.3:13)

**20** ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம். (சங்.36:9)

**21** கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறதையும்,... அவர் வலதுபக்கத்திலும் அவர் இடதுபக்கத்திலும் நிற்கிறதையும் கண்டேன். (2நாளா.18:18)

**22** உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன். (சங்.63:2)

**23** நீ என் தாசன், நான் உன்னைத் தெரிந்து கொண்டேன். (ஏசாயா 41:9)

**24** பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்து கொண்டேன். (ஆமோஸ் 3:2)

**25** நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன். (யோவான் 15:16)

**26** ...உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்துகொண்டேன். (ஏசாயா 48:10)

**27** உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஆகாய் 2:23)

**28** என் கருவை உம்முடைய கண்கள் கண்டது. (சங்.139:16)

**29** நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார். (ஆகாய் 2:23)

**30** அவர்கள் கர்த்தருடைய கிரியைகளையும், ஆழத்திலே அவருடைய அதிசயங்களையும் காண்கிறார்கள். (சங்.107:24)

# துதி அறிக்கை

## முளைக்காய்ச்சல் நீங்கி அற்புத சுகம் பெற்றேன்



நாங்கள் அன்பரின் ஊழியத்தை அதிகமாக நேசிப்பவர்கள். ஊழியத்துடன் அதிக ஈடுபாடு உண்டு. இரண்டு வருடத்திற்கு முன்பு எனக்கு காய்ச்சல் வந்து 15 நாளாக கஷ்டப்பட்டேன். மருத்துவ பரிசோதனைக்கு சென்றபொழுது மூளைக்காய்ச்சல் என சொல்லிவிட்டார்கள். உடனே என்னை அவசர சிகிச்சை பிரிவில் அட்மிட் செய்தார்கள். இருப்பினும் கண் திறக்கவில்லை, கை, கால்கள் இயங்கவில்லை, சுய நினைவை இழந்தேன். டியூப் வழியாக உணவு தரப்பட்டது. மருத்துவர்களும் என்னை காப்பாற்ற முடியாது என கைவிட்டு விட்டனர்.

அந்த நேரத்தில் அன்பரின் ஊழியத்திற்கு என் கணவர் தொடர்பு கொண்டார். *Dr.* ஜேன் ஜாஷ்வா அவர்கள் தொலைபேசி வாயிலாக பாரத்துடன் ஜெபித்தார்கள். ஓரிரு நாட்களில் கர்த்தர் அற்புத சுகத்தை எனக்கு தந்தார். கண் திறந்து நான் நடக்க ஆரம்பித்தேன். அற்புத சுகத்தை தந்து இந்நாள்வரை என்னை பாதுகாத்து வருகிற கர்த்தரை மனதார துதிக்கிறேன். அன்பரின் ஊழியத்திற்கு எங்களுடைய நன்றி காணிக்கைகளை செலுத்துகிறோம். *S.J.Saves Trust*-ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு 50 புத்தாடைகளை வழங்குகிறோம். தேவனுக்கே மகிமை!

– திருமதி.ராஜேஷ்வரி, சிதம்பரம்.



## மகன் மனந்திரும்பினான்!



எங்கள் மகன் நண்பர்களோடு சேர்ந்து கீழ்ப்படியாமல் வாழ்ந்துக் கொண்டிருந்தான். நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து *Dr.* ஆனந்த ஸ்திரா அவர்களிடம் மகனைக் குறித்து சொன்னேன். உடனே ஐயா பாரத்துடன் ஜெபித்தார்கள். அந்த நாளிலிருந்து மகன் மனந்திரும்பி, கீழ்ப்படிதல் உள்ள மகனாக இருந்து வருகிறான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

– திரு.செல்லன், கன்னியாகுமரி.

## பொருத்தனை ஜெபத்தை கர்த்தர் கேட்டார்!



எனக்கு இரண்டு முறை இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சமீபத்தில் மருத்துவ பரிசோதனைக்காக சென்றபொழுது, மருத்துவர் பரிசோதித்துவிட்டு, மூன்றாவது முறையாக இருதய அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என சொன்னார்கள். நான் கலங்கிப்போய்விட்டேன். வீட்டிற்கு வந்து, “ஆண்டவரே ஆப்ரேஷன் இல்லாமல் எனக்கு நல்ல சுகத்தை தாருங்கள்” என பொருத்தனை செய்து ஜெபித்தேன். அதன்பிறகு ஒரு மாதம் கழித்து மருத்துவ பரிசோதனைக்கு சென்றபொழுது, மருத்துவர் ஆப்ரேஷன் எதுவும் வேண்டாம், எந்த பிரச்சனையும் இல்லை என சொல்லி அனுப்பிவிட்டார்கள். அற்புத சுகம் தந்த கர்த்தரை ஸ்தோத்தரித்து, என்னுடைய பொருத்தனை காணிக்கையை ஊழியத்திற்கு தருகிறேன். கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரம்!

– திருமதி. மரிய சுந்தரம், டால்மியாபுரம்.

Telugu WhatsApp No
+91 91770 87860

## காணாமல் போன மகள் திரும்ப கிடைத்தாள்!



எங்கள் மகள் காணாமல் போய் கடந்த ஐந்து வருடங்களாக அவளைத் தேடிக் கொண்டிருந்தோம். கிடைக்கவில்லை. ஒரு நாள் தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு, *Mrs.*மார்கிரேட் ஸ்திரா அவர்களிடம் மகளைக்குறித்து சொன்னேன். அம்மா பாரத்துடன் ஜெபித்துவிட்டு, “உங்கள் மகள் தமிழ்நாட்டில் எங்கிருந்தாலும் திரும்ப வீட்டிற்கு வந்துவிடுவாள், அவளை தேட வேண்டாம்” என தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். ஒரு வாரத்தில் மகள் எங்கள் வீட்டிற்கு திரும்பி வருவதற்கு கர்த்தர் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை!

– திருமதி.தெய்வானை

## சாவின் விளிம்பிற்கு சென்றேன்!



2012-ம் வருடம் எனக்கு ***mild heart attack*** வந்தது. அதன்பின் நெஞ்சு வலி இருந்துக் கொண்டிருந்தது. தொடர்ந்து அதற்காக பல சிகிச்சைகளை மேற்கொண்டேன். எந்த பயனும் இல்லை. திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு வந்து *Dr.* ஆனந்த ஸ்திரா அவர்களிடம் சொன்னேன். ஐயா எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் மனமிரங்கி எனக்கு பூரண சுகம் தந்தார். 2025-ல் என்னுடைய சிறுநீரகம் வேலை செய்யவில்லை. மருத்துவர் பரிசோதித்துவிட்டு, என்னுடைய சிறுநீரகம் சுருங்கிவிட்டது, டயாலிசிஸ் செய்ய வேண்டும் என சொன்னார்கள். உடனே அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக் கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் அற்புதமாக என்னைத் தொட்டு சொஸ்தமாக்கினார். இப்பொழுது எந்த மாத்திரையும் எடுப்பது இல்லை. நல்ல சுகத்தை தந்த கர்த்தரை துதிக்கிறேன்.

– திருமதி.ஜோதியம்மாள், பரவக்காலனி.

## கட்டி மறைந்தது! மரண போராட்டம் நீங்கியது!



என்னுடைய 8-வது வயதில் என்னுடைய மூளையில் கட்டி உண்டானது. அதற்காக வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை தரப்பட்டது. ஒரு வருடமாக மரண போராட்டத்துடன் அங்கு இருந்தேன். சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்த நாட்களில் கடும் காய்ச்சல் வந்தது. மருத்துவர்கள் எவ்வளவோ போராடியும் இறுதியில் காப்பாற்ற முடியாது என கைவிட்டு விட்டனர்.

என் அப்பா கிறிஸ்துவை அறியாதவர், உலகப்பிரகாரமாக வாழ்ந்து வந்தவர். அங்கிருந்த சிற்றாலத்தில் தன்னை தாழ்த்தி ஒப்புக்கொடுத்து ஜெபித்து கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு நபர் *Dr.* ஆனந்த ஸ்திரா அவர்களை தொடர்பு கொண்டு ஜெபிக்கும்படி சொன்னார்கள். உடனே என் அப்பா ஐயாவிற்கு போன் செய்தபொழுது ஐயா தொலைபேசி வாயிலாக எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். ஜெபித்துவிட்டு, “மகனுக்கு இருக்கிற கடுங்காய்ச்சல் விட்டிடும் பாருங்கள்” என இயல்பாக சொன்னார்கள். சொன்ன ஒரு நிமிடத்தில் காய்ச்சல் நீங்கியது. கட்டி மறைந்தது. ஒரு சில நாட்களில் பரிபூரண சுகத்துடன் வீடு திரும்பினேன். எனக்கு அற்புத சுகம் தந்து இந்த நாள் வரை பாதுகாத்து வருகிற கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். இப்பொழுது பாஸ்டராக பணி செய்கிறேன்!

– Pr. ராஜேஷ் பால், வள்ளியூர்.


### அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**
Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**
Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**
Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

# ஏமி கார்மைக்கேல் (1867 – 1951)

பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவது மில்லை. ஆம், ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நம் தேவனின் மீட்புச்செயல்கள் பல்வேறு தேவபிள்ளைகளின் மூலமாக நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்பதன் அடையாளமாக இருக்கிறவர்தான் ஏமி கார்மைக்கேல்.

## பிறப்பும், இளம் பருவமும்

ஏமி கார்மைக்கேல் அயர்லாந்தில் பிறந்து, தமிழ்நாட்டில் பணியாற்றிய ஒரு புகழ்பெற்ற கிறிஸ்தவ மிஷனரி ஆவார். இவருடைய தந்தை பெயர் டேவிட், தாய் கேத்ரின் ஆகும். இந்த தம்பதியினருக்கு மொத்தம் ஏழு பிள்ளைகள் பிறந்தனர். அதில் மூத்த மகளாக பிறந்தவர் இவர். இவருடைய தந்தையின் மரணத்திற்குப் பிறகு ராபர்ட் வில்சன் என்பவர் இவரை தத்து எடுத்து வளர்த்து, இவரே ஆசிரியராக இருந்து அறிவு புகட்டினார்.

## ஜப்பான், இலங்கை மற்றும் இந்தியா பயணம்

1812-ம் ஆண்டு ஓர் மாலை நேரம். ஏமி கார்மைக்கேல் ஜெபத்தில் தரித்திருந்த அந்த நேரம், "ஊழியத்திற்கு புறப்பட்டு போ" என்ற ஒரு சத்தம் தேவனிடமிருந்து இவருக்கு வந்தது. உடனே இறைவன் பாதம் தன்னை ஒப்புக்கொடுத்தார். ஜப்பான் நாட்டை நோக்கி தன் பயணத்தைத் தொடர்ந்தார். 15 மாதங்கள் ஊழியத்தை முடித்து இலங்கை சென்று பணியாற்றினார். அக்காலத்தில் இந்தியாவில் தேவதாசி முறைகள் பின்பற்றப்பட்டு, சமுதாயம் சீரழிந்து கொண்டிருந்தது. இம்மக்களை மீட்டு, இவர்களுக்கு புதுவாழ்வு தருவதற்காக ஏமி கார்மைக்கேல் 1895-ம் ஆண்டு இந்தியாவில் காலடி வைத்தார்.

## இவருடைய சேவைகள் யாருக்கு தேவைப்பட்டது?

சிறுமிகள் மற்றும் பெண்களைப் போன்று சிறுவர்களும் நரபலிக்கு படைக்கப்பட்டு, நாடக கம்பெனிகளுக்கு விலைக்கு விற்கப்பட்டனர். இதை தடுக்க 1926-ஆம் ஆண்டு டோனாவூர் ஐக்கியத்தை நிறுவினார் ஏமி. திக்கற்றவர்கள், விதவைகள், துன்பப்படுகிறவர்கள், ஆதரவற்றவர்களை ஒன்றுதிரட்டி, அவர்களுக்கு புகலிடம் கொடுத்து, கிறிஸ்துவின் அன்பை செயல் வடிவத்தில் காட்டினார். இந்த அமைப்பை நட்சத்திரக் கூட்டம் என்று அழைத்தனர். இன்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள டோனாவூர் ஐக்கியம் ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு வாழ்வளித்து வருகின்றது. செம்புலிங்கம் என்ற மாபெரும் கொள்ளையன் இவருடைய பணிகளைப்பார்த்து மனந்திரும்பினான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில்உள்ளநசுக்கப்பட்டவர்களுக்காகவே துணிவுடன் 56 வருடங்கள் சேவை செய்தவர் ஏமி கார்மைக்கேல். ஒரு முறை மாட்டு வண்டியில் பயணம் செய்தபொழுது, வண்டி பள்ளத்தில் விழுந்தது. அதில் இவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு, 20 ஆண்டுகள் படுக்கையிலிருந்தாலும் சோர்ந்து போகாமல் பல நூல்களை எழுதியுள்ளார்.

ஒரு அயல்நாட்டு பெண் இந்தியாவிற்கு வந்து, சமுதாய சீர்கேட்டை எதிர்த்து தனியாக போராடி வாழ்விழந்த மக்களுக்கு வாழ்வை கொடுத்துள்ளார். இவர் வழியாக தேவனின் திட்டம் நிறைவேறியது. ஏழைகள் என்னுடையவர்கள் என்ற வாக்கின்படி வாழ்ந்த இவ்வம்மையார் 1951-ம் வருடம் விண்ணகம் சென்றார்.

English WhatsApp No
+91 94889 32937

# திருச்சியில் உபவாசக்கூட்டம்

நாள் : **ஜூன் 13 சனிக்கிழமை**

நேரம்: **காலை 9:30 மணி முதல் மதியம் 1:30 மணி வரை**

இடம்: **அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்**

10-வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு,
தில்லைநகர், திருச்சி-18. தொடர்புக்கு : 94888 45627

தேவ செய்தியாளர்கள் : *Dr. ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்*

குறிப்பு : தேசத்தின் நலனுக்காகவும், பங்காளர்களின் நலனுக்காகவும் ஜெபித்தும் விசேஷித்த கூட்டம் இது. முடிவில் மதிய உணவு வழங்கப்படும்.

# அன்பரின் ஊழியத்தில்

வாரந்தோறும் புதன், வியாழன் கிழமைகளில் காலை 10:00 மணி முதல் மதியம் 1:00 மணி வரை மற்றும் மாலை 5:00 மணி முதல் 7:00 மணி வரை ஜெபமும், வேதாகம விளக்கமும் நடைபெறும்.

**பங்காளர்கள் அனைவரும் கலந்துக்கொண்டு
தேவ ஆசீர்வாதம் பெற அன்புடன் அழைக்கிறோம்.**

*குறிப்பு: உங்கள் வருகையை கீழ்க்கண்ட இந்த எண்ணிற்கு பதிவு செய்துவிட்டு வரவும்.
செல்: 9488845627, 9488932937*





# உலக செய்திகள்

சர்வ தேச ரத்தினச் சந்தையில் மகுடம் சூட்டும் வகையில், மியான்மரின் சுரங்கப் பகுதியில் இருந்து 11,000 காரட் எடையுள்ள ராட்சத மாணிக்கக் கல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. சுமார் 4.8 பவுண்டு (2.2 கிலோ) எடை கொண்ட இந்த மாணிக்கம், ஆசியக் கண்டத்தில் சமீப காலங்களில் கண்டறியப்பட்ட மிகப் பெரிய மற்றும் அரிய ரத்தினங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

மியான்மரின் பாரம்பரியப் புத்தாண்டு விடுமுறை முடிந்து ஏப்ரல் மாத நடுப்பகுதியில் சுரங்கத் தொழிலாளர்கள் பணியில் இருந்தபோது இந்த அபூர்வக் கல் கிடைத்துள்ளது. இது கண்டெடுக்கப்பட்ட மொகோக் மாவட்டம், பல நூற்றாண்டுகளாக "உலகின் மாணிக்கத் தலைநகரம்" என்று அழைக்கப்படுகிறது.

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகாணம், ராலீ நகரில் வில்சன் காலேஜ் ஆப் டெக்ஸ்டைல்ஸ் செயல்படுகிறது. இந்த கல்லூரியில் ஜவுளி தொடர்பான பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. கடந்த 8ம் தேதி வில்சன் காலேஸ் ஆப் டெக்ஸ்டைல்ஸ் கல்லூரியின் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதில் 176 பேர் இளநிலை பட்டங்களையும், 26 பேர் முதுநிலை பட்டங்களையும் பெற்றனர். இந்த விழாவில் இந்திய வம்சாவளி தொழிலதிபர் அனில் கோச்சார் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். விழாவில் பேசிய அவர், இளநிலை பட்டம் பெற்ற 176 பேர் மற்றும் முதுநிலை பட்டம் பெற்ற 26 பேர் என மொத்தம் 202 மாணவ, மாணவியரின் கல்விக் கடனை அடைப்பதாக உறுதி அளித்து, அதற்கான தொகையை வழங்கினார். நியூயார்க் டைம்ஸ் உட்பட அமெரிக்காவின் முன்னணி ஊடகங்கள் அனில் கோச்சாரை பாராட்டி செய்திகளை வெளியிட்டு உள்ளன.


We Are Hiring!!!
CAMERA MAN/ VIDEO EDITORS
GRAPHIC DESIGER
(Any UG/PG Canditates)
Skills Required: Able to work in adobe photoshop Adobe Illustrator, Corel Draw, Adobe Premiere pro & After Effects
Male / Female, Christians Prefered
Apply to: ministryofjesushr@gmail.com


we are
HIRING
Join
OUR TEAM
CORRESPONDENCE
(Any UG/PG Candidates)
Skills Required: Typing & Computing Skills
(Tamil,English)
DRIVER
SEND YOUR RESUME TO


தஞ்சாவூரில்
அற்புதத்தின் மாலை
நாள் : ஜூன் 7 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மாலை 5.00 மணி முதல்
இரவு 8.30 மணி வரை
இடம் : சுந்தர் மஹால்,
காவேரி நகர், புதுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்-5
தொடர்புக்கு : 94888 45627 & 0431 - 2741925
Dr. ஆனந்த ஸ்திரா

# அவசர வேண்டுகோள்

*உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள், உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர். (சங். 36:8)*

*இந்தக் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவரத் தொடங்கினதுமுதல் நாங்கள் சாப்பிட்டுத் திர்ப்தியடைந்தோம், இன்னும் மிச்சமும் இருக்கிறது, கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது என்றான். 2நாளா. 31:10*

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பரின் ஊழிய பங்காளர்களே,

நீங்கள் ஒவ்வொருவரும் இம்மட்டும் ஊழியத்தை நேசித்து தாங்கி வருவதற்காக மிகுந்த நன்றிகளை தெரிவிக்கிறேன். ஊழியத்தின் சகல தேவைகளிலும் எங்களுக்கு தோளோடு தோள் கொடுத்து, ஊழியத்தை உண்மையாகவே சுமந்து வந்திருக்கிறீர்கள். அதற்காக கர்த்தரை துதிக்கிறேன்.

கர்த்தருடைய அளவற்ற கிருபையினாலும், உங்களுடைய உதாரத்துவமான காணிக்கையினாலும் நம்முடைய அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், அலுவலகம், ஸ்டுடியோ மற்றும் ஆலயம் (டெலிவரன்ஸ் திருச்சபை) 15 ஆண்டுகளாக நன்றாக இயங்கி வருகிறது. பொருளாதார தேவைகளின் மத்தியிலும் சுவிசேஷ கூட்டங்களையும் நடத்திக்கொண்டு, ஊழியர்களுக்கும் தகுந்த ஊதியங்களை வழங்கி, உங்களுடனும் கடிதம், பத்திரிக்கை, தொலைக்காட்சி, இ.மெயில், வாட்ஸ்அப், இணையதளம், சோசியல் மீடியா போன்ற அனைத்து ஊடகங்கள் வழியாகவும் தொடர்பு கொள்ளுகிறோம். இவைகளில் ஒன்றுக்கூட இலவசம் இல்லை. அனைத்திற்கும் நாம் மிகுந்த விலை கொடுத்து செலவுகளை செய்ய வேண்டியதாக இருக்கிறது. இத்தனை வருடங்களாக இவைகளை திறன்பட செய்ய கர்த்தர் பேரருள் புரிந்திருக்கிறார்.



சமீப காலமாக ஒரு சில அத்தியாவசியமான முன்னேற்ற பணிகளை நாம் நம்முடைய அலுவலகத்திலும் ஜெப ஸ்தலத்திலும் செய்ய வேண்டியிருக்கிறது.

அன்பரின் ஊழிய அலுவலகத்தில் நாம் பயன்படுத்தி வருகிற கணினி சர்வர் ***(Computer Server)*** மிகவும் பழமை அடைந்துவிட்டது. இந்த சர்வர்களில்தான் பங்காளர்களுடைய முகவரிகள், பத்திரிக்கை அனுப்புவதற்கான தகவல்கள், ஊழியத்தின் கணக்கு விபரங்கள், ***S.J.Saves Trust*** பணிகள், பங்காளர்களுடன் தொடர்பு கொள்ள உதவுகிற இ.மெயில், வாட்ஸ்அப் மற்றும் பதில் கடிதம் அனுப்பும் விபரங்கள் சேமிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மற்றும் அலுவலக உபயோகத்திற்கு இருக்கிற அனைத்து

***computers*** புதுப்பிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. 15 வருடங்கள் கழித்து இவைகளை புதுப்பிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த பணிக்கு 5 இலட்சம் முதல் 7 இலட்சம் வரை தேவைப்படுகிறது.



மேலும் புதிய வீடியோ கேமராக்கள், லென்ஸ் வாங்கவேண்டும். இதன் விலை 7 முதல் 10 இலட்சமாக இப்பொழுது உள்ளன.

எந்த ஒரு வீடோ, அலுவலகமோ சரியாக பராமரிக்கபட்டால்தான் அவைகளை நாம் நீண்ட காலம் பயன்படுத்த முடியும். அதுபோல அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தின் ***conference Hall***-லில் உள்ள டைல்ஸ் பழுது அடைந்துவிட்டபடியால் அவைகளையும் மாற்றி அமைக்க வேண்டி இருக்கிறது. இந்த அனைத்து தேவைகளும் நமக்கு மிகவும் அத்தியாவசியமாக இருக்கிறபடியால் பாரத்துடன் ஜெபியுங்கள். உதவி செய்யுங்கள். இந்த பணிகள் முடிக்க உங்களுடைய ஜெபத்தையும், உதவிகளையும் எதிர்பார்க்கிறோம். கர்த்தருடைய ஊழியத்தை செவ்வையாக செய்யவேண்டியது நமது கடமை. நவீன காலங்களில் நவீன உபகரணங்களுடன் செய்யவேண்டியது மிகுந்த அவசியம்.

அன்பரின் ஊழியத்தின் வாயிலாக பல நன்மைகளை பெற்றுக்கொண்ட நீங்கள் ஒவ்வொருவரும் இந்த ஊழியத்தை உதாரவத்துவமாய் காணிக்கை மூலம் பணிவிடை செய்ய வேண்டும். *உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன். பிலிப்பியர் 4:17-ல்* பவுல் சொன்னபடி நீங்கள் அனுப்புகிற ஒவ்வொரு பணத்தையும் சந்திக்கப்படுகிற ஆத்துமாக்களையும் கர்த்தர் தம் பரலோக கணக்கில் வைத்துக்கொள்வார்.

ஆகவே நீங்கள் என்ன கொடுத்தாலும் கர்த்தர் அதற்குரிய பலனை தருவார். அது சாதாரணமான பலனாக இருக்காது. நிச்சயமாக உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் மிகுந்த பலனையும், ஆசீர்வாதத்தையும் கொண்டு வருவதாக இருக்கும். நீங்கள் மனஉற்சாகமாய் பொருத்தனையோடு இந்த பணிக்கு காணிக்கைகளை அனுப்பி தாங்கும்படியாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் விபரங்களுக்கு இந்த எண்ணை 95004 87061 தொடர்பு கொள்ளுங்கள்.

***Name : MINISTRY OF JESUS***
***A/C No: 10848474869***
***Bank: State Bank Of India, Cantonment,***
***Trichy Main Branch | IFS Code: SBIN 0000930***

# புதிய மாதத்தின் ஆசீர்வாதக்கூட்டம்

## (New Month Blessing Meeting)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே. வருடத்தை நன்மையினால் முடிசூட்டுகிற தேவன் ஒவ்வொரு மாதத்தையும் நன்மையாக முடிசூட்டி நம்மை ஆசீர்வதிக்க விரும்புகிறார். ஒவ்வொரு புதிய மாதத்திலும் தேவ சமூகத்திலே தேவன் கொடுக்கும் வார்த்தையை பெற்றுக்கொண்டு நீங்கள் ஆசீர்வதிக்கப்பட உங்களுக்காகவே ஒவ்வொரு மாதத்தின் முதல் நாள் மாலை 6 மணி முதல் 8:30 மணி வரை இந்த சிறப்பு கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளோம்.

## வாருங்கள்! ஆசீர்வாதம் பெற!



**ஜூலை 1**
**புதன்கிழமை**
**மாலை 6:00 மணி முதல்**
**8:30 மணி வரை**

தேவ செய்தியும், ஜெபமும்

**Rev.Dr.A. ஜாஷ்வா குடும்பத்தினர்**

## டெலிவரன்ஸ் சர்ச்

**அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10–வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி–18.**

**தொடர்புக்கு : 99421 66066 & 94888 45627**

- கூட்டத்தில் பங்குபெறுகிற ஒவ்வொருவருக்கும் ஜெப எண்ணெய் பூசி விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.
- கூட்டத்தில் பங்கு பெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்.

பரவசமூட்டும் ஆராதனை
நம்பிக்கையூட்டும் தேவ வார்த்தை
விடுதலையாக்கும் ஜெபம்



மார்த்தாண்டத்தில்
உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்
13 ஜுன் 2026 – சனிக்கிழமை
காலை 9:30 மணி முதல்
மதியம் 1:30 மணி வரை
YMCA HALL
அரசு மருத்துவமனை அருகில்,
வெட்டுவெண்ணி ஜங்சன்,
மார்த்தாண்டம்
தொடர்புக்கு
94888 45627 & 82203 17472
தேவ செய்தியாளர்கள்
Rev.Dr.A. ஜாஷ்வா Dr. ஜேன் ஜாஷ்வா




திருச்சியில்
அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்
27 ஜுன் 2026
சனிக்கிழமை
காலை 9:30 மணி முதல்
மதியம் 2:30 மணி வரை
அன்பரின் ஊழிய
ஜெப ஸ்தலம்
10–வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு (80 அடி ரோடு),
தில்லைநகர், திருச்சி.
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்
தொடர்புக்கு 94888 45627 & 0431–2741925